**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 43/2021**
**வழக்கு சாட்சி PW-5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | உமா மகேஸ்வரி | தாலுகா | : | சங்கரன்கோவில் |
| தந்தை பெயர் | : | மகாராஜன் | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | கரைக்கண்டார்குளம் | வயது | : | 43 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Monday of 09.03.2026.

**(எதிரி காணொளி மூலம் ஆஜராகவில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம், எப்போதும்வென்றான் காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் ஆலங்குளம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, 14.12.2016ம் தேதி, காலை 10.00 மணிக்கு எனது தலைமையில் சிறப்பு உதவி ஆய்வாளர் ஆறுமுகம், முதல்நிலைக்காவலர் பாலசுப்பிரமணியன் மற்றும் காவலர் காசிராஜா ஆகியோர் மதுவிலக்கு சம்பந்தமாக ரோந்து சென்றபோது, ஆலங்குளம் பஸ்ஸ்டாண்ட் பின்புறம், பின்னால் பெயர், விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட ராம்நகர், புதுப்பட்டி ரோடு களஞ்சியம் மகன் முருகன் என்பவர் கையில் வைத்திருந்த வெள்ளைநிற உரச்சாக்கு பையினை கீழே வைத்து விட்டு, ஓட எத்தனித்தவரை மடக்கி பிடித்து அவர் வைத்திருந்த வெள்ளைநிற உரச்சாக்கை பரிசோதித்தபோது, அதில் 180 மிலி பிடிக்கக்கூடிய ஓல்டு செப் டீலக்ஸ் பிராந்தி எண்ணம் -11 இருந்தது. பிராந்தி பாட்டிலை திறந்து, நுகர்ந்து பார்த்தபோது, அதிலிருந்து வித்தியாசமான வாடை வந்தது. இது

சம்பந்தமாக மேற்படி நபரை விசாரித்தபோது, அவர் அரசு மதுபானக்கடைகளில் பிராந்தி வாங்கி வந்து, அதிக போதைக்காக அதில் ஊமத்தங்காய் சாறு பிழிந்து தண்ணீர் கலந்தும் விற்று வருவதாக கூறினார். எனவே, விஷப்பிராந்தி வைத்திருந்த குற்றத்திற்காக நான் எதிரியை கைது செய்தேன். பகுப்பாய்விற்காக இரண்டு பாட்டில்களில் 180 மிலி அளவு விஷபிராந்தியை நான் மாதிரிக்காக எடுத்து SHO சீல் வைத்தேன். மீதி 9 பாட்டில்களை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினேன். அத்தாட்சியில் தனிநபர் சாட்சிகள் யாரும் கையெழுத்திட முன்வராததினால் போலீஸ் பார்ட்டிகள் கையெழுத்து செய்தனர். பின்னர், எதிரியையும், சொத்துக்களையும் நிலையம் கொண்டு வந்து நிலைய குற்ற எண்.419/2016, சட்டப்பிரிவுகள் 4(1–A) TNP Act–ன் படி வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல்தகவல்அறிக்கை அ.சா.ஆ.4 ஆகும்.

பின்னர் சாட்சிகள் சிறப்பு உதவி ஆய்வாளர் ஆறுமுகம், முதல்நிலைக்காவலர் பாலசுப்பிரமணியன் மற்றும் காவலர் காசிராஜா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எனது விசாரணையை முடித்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். கைப்பற்றிய சொத்துக்களை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 அ.சா.ஆ.5 ஆகும். இத்துடன் என்னுடைய விசாரணையை முடித்து வழக்கு கோப்பை மேல்விசாரணைக்காக ஆய்வாளர் ஐயப்பன் என்பவர் வசம் ஒப்படைத்தேன். அவர் தற்போது இறந்து விட்டார். அவர் என்னுடன் பணிபுரிந்து வந்ததினால் அவரின் கையொப்பம் எனக்கு தெரியும்.

அவர் இந்த வழக்கை மேல்விசாரணைக்காக எடுத்துக்கொண்டு, 08.02.2017 அன்று கைப்பற்றப்பட்ட பொருட்களை பகுப்பாய்வு செய்வதற்காக ஆலங்குளம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் கடிதம் பெற்று அனுப்பி வைத்துள்ளார். இத்துடன் அவர் விசாரணையை முடித்து அவர் பணிமாறுதலில் சென்றதினால் வழக்கு கோப்பினை நிலையத்தில் ஒப்படைத்து சென்றுள்ளார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** –

ஆலங்குளம் பஸ்ஸ்டாண்டானது காலை 10.00 மணிக்கு மக்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். நான் பொதுமக்கள் யாரையும் சாட்சியாக இருக்க அழைக்கவில்லை என்றால் அழைத்தேன், ஆனால் யாரும் முன்வரமில்லை. எழுத்து மூலமாக நான் யாரையும் அழைக்கவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியை சம்பவயிடத்தில் வைத்து தயார் செய்தேன். சாட்சிகள் சம்பவயிடத்தில் வைத்து கையெழுத்து செய்தார்கள். நான் தயார் செய்த அத்தாட்சி கணினியில் பிரிண்ட் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். நிலைய புள்ளி விபரக்கணக்கிற்காக எதிரி மீது இந்த வழக்கு பொய்யாக போடப்பட்டது என்றால் சரியல்ல. SHO சீல் வைப்பதற்கு சட்டப்படி எனக்கு அதிகாரமில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் முதல்தகவல்அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும், எதிரியை கைது செய்யவில்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் உள்ள அனைத்து ஆவணங்களும் காவல்நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.11 11:28:30 +0530